## SUBORDINATE COURT, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Original Suit No. | : | MCOP.No. 31/2023 |
| Deposition of witness for | : | Petitioner |
| Serial No. of Witness | : | PW.1 |
| Name | : | திரு. சதீஸ்குமார் |
| Father/Husband Name | : | திரு. மணி |
| Village | : | ரெட்டிப்பட்டி |
| Taluk | : | ஊத்தங்கரை |
| Age | : | 22 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 11$^{th}$ November – 2025 | | |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் இன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு, கணினி தட்டச்சு செய்யப்பட்டு நான் அதை படித்து பார்த்து சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன் என்று உறுதி கூறுகிறேன்.

கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| ம.சா.ஆ. | தேதி | ஆவணம் | தன்மை |
|---|---|---|---|
| 1 | 25.10.2022 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| 2 | 24.10.2022 | விபத்து பதிவேடு | நகல் |
| 3 | | காயச் சான்றிதழ் | நகல் |

| | | | |
|---|---|---|---|
| 4 | 09.11.2022 | மருத்துவர் ஆலோசனை ரசீது மற்றும் அறிக்கை | நகல் |
| 5 | | இருசக்கர வாகன பதிவு சான்று | நகல் |
| 6 | | காப்பீடு சான்று | நகல் |
| 7 | | ஓட்டுனர் உரிமம் | நகல் |
| 8 | | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | நகல் |
| 9 | | ஆட்டோ வாகன பதிவு சான்று | நகல் |
| 10 | | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் | நகல் |
| 11 | | ஆட்டோ வாகன ஆய்வு அறிக்கை | நகல் |
| 12 | | மருத்துவ ரசீதுகள் | நகல் |
| 13 | | மனுதாரர் ஆதார் அட்டை ( அசலுடன் சரிபார்க்கப்பட்டது ) | நகல் |
| 14 | | பேன் அட்டை ( அசலுடன் சரிபார்க்கப்பட்டது ) | நகல் |
| 15 | | வங்கி புத்தகம் ( அசலுடன் சரிபார்க்கப்பட்டது ) | நகல் |

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை-**

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் எதிரில் வந்ததாக குறிப்பிடும் வாகனம் குறித்தும் அதன் பதிவு எண்ணும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எங்கள் மீது மோதிய வாகனத்திற்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் மற்றும் காப்பீடு சான்று இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி எங்கள் மீது மோதிய வாகனத்தின் உரிமையாளரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி எங்கள் மீது மோதிய வாகன உரிமையாளரை தரப்பினராக சேர்க்காததால் மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் சென்ற வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டினார். 1ம் எதிர்மனுதாரரின் அனுமதியின் பேரில்தான் நான் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். நான்

அமர்ந்து சென்ற வாகனத்திற்கு நான் 3ம் தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகன காப்பீடு சான்றில் பின்னால் அமர்ந்து செல்வதற்கு கூடுதல் பிரிமியம் தொகை 1ம் எதிர்மனுதாரர் செலுத்தவில்லை என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் மேற்படி இருசக்கர வாகனத்தை பொருத்து 3ம் தரப்பினார் என்பதாலும், பின்னால் அமர்ந்து செல்பவருக்கு கூடுதல் பிரிமியம் தொகை செலுத்தாததாலும் 2ம் எதிர்மனுதாாரர் எந்த விதத்திலும் பொருப்பாக மாட்டார் என்றால் சரியல்ல. எனக்கு ஏதேனும் இழப்பீடு கிடைக்க வேண்டும் எனில் மேற்படி விபத்தில் சம்பந்தப்பட்ட 2 வாகனங்களின் உரிமையாளர்களிடம் தான் பெற வேண்டும் என்றால் சரியல்ல. தலைகவசம் அணிந்து சென்றிருந்தால் எங்களுக்கு தலையில் அடிப்பட்டிருக்காது என்றால் சரியல்ல. இருவரும் தலைகவசம் அணிந்து தான் சென்றோம். மேற்படி விபத்தினால் ஏற்பட்டதாக கூறும் காயங்களுக்கு அறுவை சிகிச்சை செய்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அறுவைசிகிச்சையின்போது ராடு வைத்து இருப்பதற்கான X-ray தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகமானது என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் எப்போதும் போல் எனது வேலையை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கூறியுள்ள இழப்பீட்டிற்கு எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஊன சான்று மிகைபடுத்தி குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் கட்டிட வேலை செய்வதற்கான ஆவணமோ சங்க உறுப்பினர் அட்டையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு எந்த வேலையும் இல்லை என்றாலும் அதனால் எனக்கு எந்த வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.